# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 116/ந/2019**

**நாள் : 08/02/2020**

**23.07.2019 நாளிட்ட தினகரன் நாளிதழில் வெளியான செய்தி.** – **முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது**

**நகராட்சி ஆணையர், இராமநாதபுரம் நகராட்சி..** – **எதிர் மனுதாரர்**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சிப் பகுதிகளான அரன்மணை, பெரிய பஜார், கேணிக்கரை மற்றும் பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் கடைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்தது குறித்து 23.07.2019 நாளிட்ட தினகரன் நாளிதழில் வெளியான செய்தியினை இம்முறைமன்ற நடுவம் தாமாக 116/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்து நகராட்சி ஆணையரின் அறிக்கைப் பெறப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

## ஆணை

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சிப் பகுதிகளான அரன்மணை, பெரிய பஜார், கேணிக்கரை மற்றும் பேருந்து நிலையம் என பல்வேறு இடங்களில் கடைகள் கட்டி ஆக்கிரமிப்பு செய்தது குறித்து 23.07.2019 நாளிட்ட தினகரன் நாளிதழில் பீட்டர் மாமா பகுதியில் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது.

2. இராமநாதபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவது சம்பந்தமாக இராமநாதபுரம் உதவி ஆட்சியர் அவர்களின் கூட்ட நடவடிக்கையில் முடிவெடுக்கப்பட்டு, அதன்படி 30.01.2020 மற்றும் 31.01.2020 ஆகிய இருதினங்களிலும் ஆக்கிரமிப்புகள் அனைத்தும் அகற்றப்பட்டன என்று நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். ஆக்கிரமிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட நிலையினைத் தெரிவிக்கும் புகைப்பட நகல்களையும் சமர்ப்பித்துள்ளார். ஆக்கிரமிப்பு குறித்து செய்தி வெளியிட்ட தினகரன் நாளிதழ் தனது 30.01.2020 நாளிட்ட நாளிதழில் " இராமநாதபுரத்தில் ஆக்கிரமிப்பு அகற்றம்" 20 அடி சாலை 40 அடியாக அதிகரிப்பு என்று தலைப்பிட்டு செய்தியும் வெளியிட்டுள்ளது. எனினும்,

சில நாட்களில் மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்பட்டுவிடும் என்றும் இனி யாரும் ஆக்கிரமிப்பு செய்யாத வகையில் காவல் துறையினரும், நகராட்சி அதிகாரிகளும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் விரும்புகின்றனர் என்ற கருத்தினையும் செய்தியில் பதிவு செய்துள்ளது. பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டு சாலை ஆக்கிரமிப்புகளை அகற்றிய இராமநாதபுரம் நகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகத்தினருக்கு ஒத்துழைப்பினை நல்கிய வருவாய்த் துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் செயல்பாட்டினை இம்முறைமன்ற நடுவம் பாராட்டுகிறது. நகராட்சிப் பகுதிகளில் மீண்டும் ஆக்கிரமிப்புகள் ஏற்படாவண்ணம் உறுதி செய்வதுடன் அப்போதுக்கப்போது ஏற்படும் ஆக்கிரமிப்புகளை ஆரம்ப நிலையிலேயே அகற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென இராமநாதபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

**2020**–ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், **8**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 13.2.20

13.2.2020

13/2/2020

**பெறுநர்**

**நகராட்சி ஆணையர்,**
**இராமநாதபுரம் நகராட்சி,**
**இராமநாதபுரம்.**

**நகல் :**

**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்**
**பிரிவு அலுவலர் (நிர்வாகம்)**
**பேரூராட்சி பிரிவு – 3**
**இ.கோ. / உதிரி**